<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>MCOP. No.65/2021</u>

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29–ஆம் நாள் ம.சா.1 சாட்சி திரு.சுப்பிரமணியம் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.சுப்பிரமணியம் | தொழில் | : |
| த/பெ | : சண்முகநாதன் | கிராமம் | : |
| வயது | : | தாலுக்கா | : |

<u>ம.சா. : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் மனுதாரர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

05.11.2020 காரமடை காவல்நிலைய குற்ற எண்.688/2020–ன் முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆகவும், 04.11.2020 கோயமுத்தூர் One Care Medical Center மருத்துவமனை வழக்கிய காயச்சான்றிதழ் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2

ஆகவும், 12.11.2020 கோயமுத்தூர் One Care Medical Center மருத்துவமனையில் உள்நோயாளியாக தங்கி சிகிச்சைப் பெற்றதற்கான Discharge Summary அசல் ம.சா.ஆ.3 ஆகவும், 07.11.2020 விபத்து ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் பதிவு எண். TN 40 T 8842ன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4 ஆகவும், 19.11.2020 மோட்டார் சைக்கிள் பதிவு எண்.TN 40 B 9987ன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6 ஆகவும், 05.11.2020 பார்வை மகஜர் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7 ஆகவும், 11.02.2021 குற்ற அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.8 ஆகவும், 24.02.2021 தீர்ப்புரை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.9 ஆகவும், 12.11.2020 கோயமுத்தூர் One Care Medical Center மருத்துவமைனையில் உள்நோயாளியாக தங்கி சிகிச்சைப் பெற்றதற்கான Inpatient Bill நகல் ம.சா.ஆ.10 ஆகவும், மருந்து, மாத்திரை பில்கள் (எண்ணிக்கை 5) அசல் ம.சா.ஆ.11 ஆகவும், மருத்துவர் குறிப்புகள் (எண்ணிக்கை 1 – 16) அசல் ம.சா.ஆ.12 ஆகவும், ஓட்டுனர் உரிமம் அசல் ம.சா.ஆ.13 ஆகவும், எதிரி மோட்டார் சைக்கிள் TN 40 T 8842ன் RC Copy நகல் ம.சா.ஆ.14 ஆகவும், மோட்டார் சைக்கிள் TN 40 T 8842ன் Policy Copy நகல் ம.சா.ஆ.15 ஆகவும், ஆதார் கார்டு நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு பார்க்கப்பட்டது ம.சா.ஆ.16 ஆகவும், Pan Card நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு பார்க்கப்பட்டது ம.சா.ஆ.17 ஆகவும், Bank A/c Pass BooK நகல் ம.சா.ஆ.18 ஆகவும், ஸ்கேன்ஸ் (எண்ணிக்கை 3) அசல் ம.சா.ஆ.19 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் மனுதார் ஆவேன். விபத்து நடந்த தேதி மற்றும் நேரம் என்னவென்றால் தேதி நினைவு இல்லை. TN 40 B 9987 எனக்கு சொந்தமான வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் ஹெல்மெட் அணிதிருந்தேனா என்றால் இல்லை. நான் நின்று கொண்டு தான் இருந்தேன். விபத்து சமயத்தில் நான் எங்கிருந்து எங்கு சென்று கொண்டிருந்தேன் என்றால் RV நகர் ரோடிலிருந்து வந்து வடக்க திரும்புவதற்காக நின்று கொண்டிருந்தேன். RV நகர் ரோடு சிறிய சாலை என்றால் சரிதான். தென்வடல் சாலை அகலமான சாலை என்றால் சரிதான். நான் கிழக்கிலிருந்து வந்து வடக்கே திரும்புவதற்காக நின்றுகொண்டிருந்ததாக மூலமனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியில்லை. இந்த முதல் தகவல் அறிக்கையில் RV நகர் கட் ரோட்டில் கிழக்கில் இருந்து வந்து வடக்கா திரும்பிய போது மேட்டுபாளையம் – கோவை ரோட்டில் வடக்கு இருந்து தெற்காக வந்த TN 40 T 8842 இரு சக்கர வாகனம் மோதியதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த நபர்களை விசாரித்து என் தம்பி விபத்து எவ்வாறு நடந்தது என்று விசாரித்து தெரிந்து கொண்டு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். குறுக்கு ரோட்டிலிருந்து மெயின் ரோட்டிற்கு வரும்போது நிதானமாக வந்திருந்தால் இந்த விபத்தை தவிர்த்து இருக்கலாம் என்றால் சரிதான். குறுக்கு சாலையில் இருந்து நீர் தான் அதிவேகமாகவும் கவனகுறைவாகவும் வந்து வடபுறமாக திரும்பி வடக்கிலிருந்து தெற்காகா சரியான பாதையில் வந்து கொண்டிருந்த மோட்டார் வாகனத்தின் மோதி

விபத்து ஏற்படுத்தி கொண்டீர் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் இந்த மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த 1—ம் எதிர்மனுதாரோ அல்லது காப்பீடு நிறுவனமோ இழப்பீடு வழங்க கடமைபட்டவர் அல்ல என்று கூறுகிறார் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். அதற்க அறுவை சிகிச்சை ஏதேனும் செய்தார்களா என்றால் இல்லை. மருந்து மாத்திரை மட்டும் தான் எடுத்துக் கொண்டேன். நான் தலைகவசத்தை அணிந்து சென்றிருந்தால் எனக்கு தலையில் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் நான் தொடர் சிகிச்சையாக 4 மாதம் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றேன். அதற்குண்டான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரண குணமடைந்ததால் தான் நான் தொடர்சிகிச்சை மேற்கொண்ட ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனமோ, வருமான இழப்போ, நிரந்தர செயல்படு இழப்போ இல்லை என்றும், பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லியுள்ள விபரங்கள் எல்லாம் வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. 1—ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாததால் 2—ம் மனுதாரர் எந்த வகையிலும் இழப்பீடு தர கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. தொழில் வருமானத்தை காண்பித்தற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.